செ.வெ.எண்: 12/ஜுலை நாள் : 06.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இன்று (06.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக சேதுக்கரை கடற்கரையில் சுற்றுலாத்துறையின் மூலமாக உயர்மட்ட கோபுர விளக்கு, கழிப்பறைகள், பெண்களுக்கான உடைமாற்றும் அறைகள் உள்பட பல்வேறு திட்டப் பணிகள் செயல்படுத்த அரசுக்கு கருத்துரு அனுப்பிடுமாறு சுற்றுலாத்துறை அலுவலர் அவர்களை கேட்டுக் கொண்டார்.

திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கோரைக்குட்டம் கிராமத்தில் 14-ஆவது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.1.82 இலட்சம் மதிப்பில் கோரைக்குட்டம் கொட்டகுடி ஆற்றுக்கருகில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்புச் சுவர் கட்டுமானப் பணிகளையும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித்திட்டத்தின் கீழ் ரூ.14.55 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி சேவை மைய கட்டிட கட்டுமானப் பணிகளையும், தனிநபர் இல்லக் கழிப்பறைக் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்பு பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளியின் பசுமை வீட்டினையும் பார்வையிட்டார். தொடர்ந்து திருப்புல்லாணி கிராமத்தில் ரூ.22.16 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பள்ளி கட்டிட கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு, மங்களேஸ்வரி கிராமம் மற்றும் குதக்கோட்டை ஆகிய கிராமங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ.75,000/- மதிப்பில் பயனாளியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள காளான் வளர்ப்பு குடில்களை பார்வையிட்டார். தொடர்ந்து குதக்கோட்டை கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பெரிய ஊரணி ஆழப்படுத்தும் பணிகளையும், கொட்டியக்காரன் வலசை கிராமத்தில் தனிநபர் விவசாய நிலத்தில் கான்கிரீட் கிணறு அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.ராமசாமி, உதவி செயற்பொறியாளர்கள் திரு.டி.கண்ணதாசன், திரு.எம்.சுந்தரபாண்டி, வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் திரு.கே.கேசவன், திருமதி.ஏ.ஹேமலதா ஆகியோர் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**